உள்ளே ......

- ☞ தனியார் துறையில் இடஒதுக்கீடு தேவையா ?
- ☞ தனியார் துறையில் இடஒதுக்கீடு இல்லாததால் தாழ்த்தப்பட்டோருக்கு என்ன இழப்பு ?
- ☞ பிற்படுத்தப்பட்டோருக்கு இழப்பா ?
- ☞ அமெரிக்க , அய்ரோப்பிய நாடுகளில் தனியார் துறையில் இடஒதுக்கீடு பற்றிய செய்திகள்
- ☞ கம்ப்யூட்டர் நிறுவனங்களில் இரகசிய பார்ப்பனச் சங்கங்கள் ! அதிர்ச்சித் தகவல் !
- ☞ தொலைக்காட்சி - பத்திரிக்கை நிறுவனங்களில் தலித் மக்கள் புறக்கணிப்பு


*வெளியீடு* :

**தந்தை பெரியார் திராவிடர் கழகம்**

*நூல் கிடைக்குமிடங்கள்*:

| | |
|---|---|
| பெரியார் படிப்பகம் | பெரியார்படிப்பகம் |
| பேருந்துநிலையம் | பேருந்துநிலையம் |
| மேட்டூர் அணை-636401 | காந்திபுரம்- 641044 |
| சேலம் 04298.344162 | கோவை.98430.11159 |

நன்கொடை : ரூ . 5. 00


# தனியார் துறையில் இடஒதுக்கீடு

## ஏன் ?

## எதற்கு ?


விடுதலை இராசேந்திரன்

படியுங்கள்.....

புரட்சிப்

## பெரியார் முழக்கம்

வார இதழ்

ஆண்டுச்சந்தா : ரூ 150 / -

<u>சந்தா அனுப்பவேண்டிய முகவரி</u>

29 , இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர்
திருவான்மியூர் - சென்னை - 41

<u>இதழ் கிடைக்குமிடங்கள் :</u>

பெரியார் படிப்பகம்
அரசு விரைவுப்பேருந்து நிலையம் அருகில்
காந்திபுரம் - கோவை - 641 044

பெரியார் படிப்பகம்
பேருந்து நிலையம் அருகில்
மேட்டூர் அணை . அஞ்சல்
சேலம் மாவட்டம் - 636 401

# தனியார் துறையில் இடஒதுக்கீடு ஏன் ? எதற்கு ?

விடுதலை இராசேந்திரன்

*வெளியீடு* :

தந்தை பெரியார் திராவிடர் கழகம்
63 / 21 , சைவ முத்தையா 5 வது தெரு
இராயப்பேட்டை - சென்னை - 600 014

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தனியார் துறை இடஒதுக்கீடு<br>ஏன் ? எதற்கு ? |
| நூலாசிரியர் | : | விடுதலை க. இராசேந்திரன் |
| வெளியீடு | : | தந்தை பெரியார் திராவிடர் கழகம் |
| முதல் பதிப்பு | : | 9. 9. 2002 |
| பக்கங்கள் | : | 32 |
| பிரதிகள் | : | 1000 |
| நன்கொடை | : | 5 . 00 |
| நூலாசிரியர் முகவரி | : | 29 , இதழியலாளர் குடியிருப்பு<br>திருவள்ளுவர் நகர்<br>திருவான்மியூர் - சென்னை - 41 |
| கணினியாக்கம் | : | க்ரியேட்டிவ் கிராஃபிக்ஸ்<br>கோடம்பாக்கம் - சென்னை |
| மறுதோன்றி அச்சு | : | வேல்முருகன் ஆஃப்செட்<br>சின்னாளப்பட்டி - 624 301 |

# வி.எஸ்.என்.எல். நிறுவனத்தில் பங்கும் போனது ; ஒதுக்கீடும் போனது !

இந்தியாவின் தொலைத் தொடர்புத் துறை முழுவதையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டிருக்கும் நிறுவனம் வி.எஸ்.என்.எல். ( விதேஷ் சஞ்சார் நிகாம் லிமிட்டெட் ) இது மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமாகும். உயர் அதிகாரிகளில் பெரும்பாலோர் பார்ப்பனர்கள் தான். தொலை தொடர்புத்துறை ஒரு நாட்டின் பாதுகாப்போடு தொடர்புடையது! ஆனாலும் மத்திய அரசு நிறுவனங்களை தனியாருக்கு தாரை வார்ப்பதற்காகவே, ஒரு அமைச்சர் இருக்கிறார், அல்லவா? அந்த அருண்ஷோரி எனும் பார்ப்பனர் தான் - இந்தப் பொதுத்துறை நிறுவனத்திலும் - தனியாரை நுழைக்கத் திட்டமிட்டார். 'டாட்டா டெலி சர்வீசஸ்' எனும் டாட்டா நிறுவனத்தோடு பேரம் நடந்தது. டாட்டாவின் இந்த நிறுவனம் ஒரு பனியா நிறுவனம். அண்மையில்தான் துவங்கப்பட்டது. இன்னும் முழுமையாகக் கூட அது உருவாகவில்லை.

வி.எஸ்.என்.எல். நிறுவனமோ, மிகப் பழமையானது; தொலைத் தொடர்புத்துறை பொறுப்பை நிர்வகிக்கும் பார்ப்பன அமைச்சர் பிரமோத் மகாஜன் கட்டுப்பாட்டில் இயங்குகிறது இந்த நிறுவனம்! பார்ப்பன அமைச்சர் அருண்ஷோரியும் - மற்றொரு பார்ப்பன அமைச்சர் மகாஜனும் கலந்து பேசி, 25 சதவீதப் பங்குகளை'டாடா டெலி சர்வீஸ்' நிறுவனத்துக்கு விற்பனை செய்ய முடிவு செய்தார்கள். இதன் மூலம் வி.எஸ்.என்.எல். நிறுவனம் - டாட்டா டெலி சர்வீஸ் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. உடனே வி.எஸ்.என்.எல் நிறுவனத்திலிருந்து ரூ. 1,200 கோடியை எடுத்து, தனது நிறுவனத்தில் முதலீடு செய்து கொண்டது டாட்டா நிறுவனம்!.

வி.எஸ்.என்.எல். நிறுவனம் ஒரு பொதுத்துறை நிறுவனமாக இருந்ததால், அங்கு தலித் மக்களுக்கான இடஒதுக்கீடு இருந்தது. இப்போது பனியாக்களிடம் போய்விட்டதால், பங்குகள் பறிபோனதோடு, இட ஒதுக்கீடும் பறிபோய்விட்டது !

## பறிபோகும் வேலைவாய்ப்புகள்

அரசுத்துறைகளில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோருக்கான வேலைவாய்ப்புகளுக்கு, எதிர்காலத்தில் இடமே இல்லை என்ற நிலை உருவாகிவிட்டது.

இழப்பில் நடக்கும் பொதுத்துறை நிறுவனங்களைமூடி விடுவது ; இலாபத்தில் நடக்கும் பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்று விடுவது என்பதே அரசின் கொள்கை. பாரத் அலுமினியம் கம்பெனியில் 51 சதவீத பங்குகளை மத்திய அரசு தனியாருக்கு விற்றுவிட்டது. இதுபோல் இன்னும் 27 பொதுத்துறை நிறுவனங்கள் விற்பனை செய்யப்பட விருக்கின்றன. எனவே, இங்கு தாழ்த்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டின் படி வழங்கப்பட்ட வேலை வாய்ப்புகள் பறிபோய்விடுகின்றன.

தேசியமய வங்கிகளில் - தாழ்த்தப்பட்டோருக்கும், பிற்படுத்தப் பட்டோருக்கும் இடஒதுக்கீடு உண்டு ; ஆனால் வங்கிப்பணிகளுக்கு ஆட்கள் எடுப்பதை நிறுத்திவிட முடிவு செய்துவிட்டார்கள். வங்கிப்பணியாளர் தேர்வாணையம் முடக்கப்பட்டுவிட்டது. இதன் மூலம் வங்கிப்பணிகளில் இனி தாழ்த்தப்பட்டோரும், பிற்படுத்தப்பட்டோரும் நுழையவே முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

1000 தொழிலாளர்களுக்குக் குறைவாக வேலை செய்யும் கம்பெனிகள் அரசுக்குத் தெரிவிக்காமலேயே, அனுமதியின்றி கதவடைப்பு, ஆட்குறைப்பு செய்யலாம் என்று மத்திய அரசு அறிவித்துவிட்டது. 100 தொழிலாளருக்கு மேல் வேலை செய்யக்கூடிய எந்த நிறுவனத்தையும் அரசு அனுமதியின்றி மூடக்கூடாது என்றிருந்த விதியை, இப்படி 1000 பேராக மாற்றி விட்டார்கள். இதனால் வேலை இழக்கும் ஆபத்துகள் அதிகரித்துவிட்டன.

# தனியார் துறை இடஒதுக்கீடு ஏன்?

தனியார் துறையில் தாழ்த்தப் பட்டோர், பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற முழக்கம் - இப்போது நாடு முழுதும் வலிமையடைந்து வருகிறது. இட ஒதுக்கீடு என்ற சொற்றொடருக்கு பதிலாக சமூகத்தின் பல்வேறு பிரிவினருக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்படுதல் வேண்டும் என்ற கோட்பாட்டை முன்னிறுத்தி பன்முகத் தன்மை (Diversity) என்ற சொற்றொடரை, இப்போது சமூகவியலாளர்கள் பயன்படுத்துகிறார்கள். ஒரு நாடு ஜனநாயகமாக செயல்படுவதற்கான அடையாளம் அந்நாட்டின் சமூகமும் ஜனநாயகப் படுத்துவதில் அடங்கி இருக்கிறது. அனைத்து சமூகப் பிரிவினருக்கும் சமவாய்ப்பு வழங்குவதே சமூக ஜனநாயகம்.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை சமூகத்தினரும், பெண்களும், அனைத்துத் துறைகளிலும் புறக்கணிக்கப் பட்டக்காலம் ஒன்று இருந்தது; படிப்பும், உத்தியோகமும், சமுதாயத்தின் மேலாதிக்கமும், அரசியல் அதிகாரமும், தங்களுக்கு மட்டுமே உரிமையாக்கிக் கொண்டு பார்ப்பனர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இதை எதிர்த்து, அரசியல் சமூக உரிமைகளுக்கான போராட்டங்கள் வெடித்தன. அதன் காரணமாக அரசியலில் ஒடுக்கப்பட்ட மக்கள் பங்கேற்கும் உரிமைகள் கிடைத்தன. ஆனால், சமூகத்தில் அனைத்து ஒடுக்கப்பட்டப் பிரிவினருக்கும் சமவாய்ப்புகளை வழங்கக்கூடிய சமூக ஜனநாயகம் இன்னும் வரவில்லை.

அரசுத்துறைகள் இப்போது வேகம் வேகமாக தனியார் துறைகளாக்கப்படுகின்றன. அரசு முதலீடுகள் குறைக்கப்பட்டு, பன்னாட்டு நிறுவனங்களின் முதலீடுகளுக்கு கதவு திறந்து விடப்படுகின்றன. இதற்காகவே மத்தியப் பார்ப்பன ஆட்சி, ஒரு தனித்துறையையே உருவாக்கி தனி அமைப்புகளின் கீழ் செயல்படுத்தி வருகிறது. இப்போது இதன் அமைச்சராக இருப்பவர் அருண்ஷோரி எனும் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர். முன்னாள் பத்திரிக்கையாளர். அம்பேத்கரை அவமதித்து, நூல் எழுதியவர்.

அரசுத் துறைகள் தனியார் மயமாகும் போது, நிர்வாகம் தொடர்பான முடிவுகளை நிர்ணயிக்கும் உரிமைகள், தனியாரிடம் போய் விடுகின்றன. இதனால் இட ஒதுக்கீட்டு உரிமைகள் காற்றில் பறந்து விடும் ; தனியார் மயமாக்கல் கூடாது என்று நாம் உரத்துக் கூறினாலும், அது தடைப்படுத்த முடியாத அளவுக்கு வேகமடைந்து விட்டது. எனவே, தனியார் துறையிலும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு உரிமைகளைக் கோர வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

தந்தை பெரியார் அவர்களால் வலியுறுத்தப்பட்டு, நீதிக்கட்சி ஆட்சிக் காலங்களில் அமுலில் இருந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்பது தான், இன்று சமூகவியலாளர்கள் முன்மொழியும், பன்முகத்தன்மை என்ற கோட்பாடு!

வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தின்படி தாழ்த்தப்பட்டோர், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், ஆங்கிலோ இந்தியர், பார்ப்பனரல்லாதார் என்ற பிரிவினருக்கு, வேலை வாய்ப்புகளில், தனித்தனியாக இட ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. பின்னர், 1950 களில் இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை எதிர்த்து, பார்ப்பனர்கள் வழக்கு தொடர்ந்தார்கள். வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் செல்லாது என்று உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் தீர்ப்பளித்து விட்டன. பெரியார் போர்க்கோலம் பூண்டார். போராட்டம் வெடித்தது. அதன் பிறகு இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட்டு முதன் முதலாக வகுப்புவாரி உரிமைக்குப் பதிலாக, தற்போதுள்ள இட ஒதுக்கீடு என்ற முறை அமுலுக்கு வந்தது. இந்த சட்டத் திருத்தத்தின் காரணமாகத்தான் அரசியல் சட்டத்தில் 15(4), 16(4) என்ற பிரிவுகள் சேர்க்கப்பட்டு, கல்வியிலும், வேலை வாய்ப்புகளிலும் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு உரிமைகள் கிடைத்தன. அரசியல் சட்டம் 340வது பிரிவின் படி பிற்படுத்தப்பட்டோருக்கு, கமிஷன் அமைக்கும் உரிமையும், அப்போதுதான் கிடைத்தது. இதன்படி தான் நேரு பிரதமராக இருந்த போது காகாகலேல்கர் தலைமையில் முதல் பிற்படுத்தப்பட்டோர் கமிஷன் அமைக்கப்பட்டது. காகாகலேல்கர் ஒரு பார்ப்பனர் ; அவர் தலைமையில் அமைந்த குழு அளித்த பரிந்துரையில் "1961 மக்கள் தொகைக்கணக்கெடுப்பை - சாதிவாரியாகக் கணக்கிட வேண்டும். இந்து சமுதாய அமைப்பில் ஒரு சாதி எந்த அளவுக்கு கீழாக உள்ளதோ, அந்த அளவுக்கு அது பிற்பட்ட வகுப்பாகக் கருதப்படவேண்டும் ; பெண்கள் அனைவரையும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகக் கருதப்பட வேண்டும்" என்று பரிந்துரைத்தது. முதல் வகுப்புப் பதவிகளுக்கு 25 சதவீதமும், இரண்டாம் வகுப்பு பதவிகளுக்கு 331/3 சதவீதமும், மூன்று, நான்காம் வகுப்பு பதவிகளுக்கு 40 சதவீதமும், மருத்துவ, பொறியியல் கல்லூரிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு 70 சதவீதமும் இடஒதுக்கீடு செய்ய அக்குழு பரிந்துரைத்தது. ஆனால் அதற்குப் பிறகு தான் ஒரு திட்டமிட்ட சதி அரங்கேற்றப்பட்டது.

பரிந்துரையை அரசுக்கு அளித்த பிறகு, காகாகலேல்கர், குடியரசுத்தலைவருக்கு ஒரு கடிதம் எழுதினார், பரிந்துரைக்கு, நேர் மாறாக, சாதி அடிப்படையில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட இதுக்கீடு செய்ய வேண்டும் என்ற தமது குழுவின் கருத்தைத் தான் மாற்றிக் கொண்டு விட்டதாகவும், பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்துக்கு தாம் பணிய நேர்ந்ததால், பரிந்துரையில் அவ்வாறு குறிப்பிட நேர்ந்துவிட்டது, என்றும் அவர் தனது கடிதத்தில் எழுதிவிட்டார், சாதி அடிப்படையில் இடஒதுக்கீடே செய்யக்கூடாது என்பதே தமது கருத்து என்றும் அந்தப் பார்ப்பனர் குறிப்பிட்டிருந்தார். இந்த 'பல்டி' க்குப் பின்னணி என்ன? அன்றைய பிரதமர் நேரு, சாதி அடிப்படையில் இடஒதுக்கீடு செய்வதை விரும்பவில்லை, பரிந்துரையைப் பார்த்து நேரு ஆத்திரமடைந்ததால், காகாகலேல்கர், இப்படி ஒரு கடிதத்தை எழுதினார் என்று மறைந்த சோஷலிஸ்ட் கட்சித் தலைவரும், சிறந்த நாடாளுமன்ற வாதியுமான மதுலிமாயி கூறியுள்ளார். (ஆதாரம் : இந்து 19.09.1990) ஆக - காகாகலேல்கர் கமிஷன் பரிந்துரை - பார்ப்பனர்கள் சதியால், முடக்கப்பட்டு, செயலற்றதாக்கப்பட்டது. அதன் பிறகு, 1978 -ல் ஜனதா கட்சி ஆட்சிக்கு



## கம்ப்யூட்டர் நிறுவனங்களில் இரகசிய பார்ப்பன சங்கங்கள்

தனியார் கம்ப்யூட்டர் நிறுவனங்களில் பார்ப்பனர்கள் ஆதிக்கம்தான் தலைவிரித்தாடுகிறது. கம்ப்யூட்டர் பொறியாளர்களில் நிபுணத்துவம் நிறைந்த தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட பொறியாளர்கள் ஏராளமாக இருந்தும், அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் இல்லை. கம்ப்யூட்டர் நிறுவனங்களில் பணியாற்றும் பார்ப்பனரல்லாத பொறியாளர்களுக்கு, வேலை வாய்ப்புகளும் நிரந்தரமில்லை! நிறுவனத்தின் கீழ் இவர்கள் ஊழியர்களாக இருந்தாலும், நிறுவனம் மேற்கொள்ளும் 'புராஜெக்ட்'களில் இவர்களாகவே போட்டியிட்டு இடம் பிடிக்க வேண்டும். நிறுவனமே இவர்களுக்குப் பணிப்பொறுப்புகளை வழங்காது. அப்படிப் பணிப்பொறுப்புகள் எதுவும் இல்லை என்றால், இரண்டு மாதத்தில் அவர்கள் தாமாகவே வேலையை விட்டுப் போய்விட வேண்டியது தான்!

இந்த நிறுவனங்களில் நிர்வாக அதிகாரிகளாகப் பார்ப்பனர்களே இருக்கின்றனர். எனவே, நிறுவனத்துக்கு வரக்கூடிய 'புராஜெக்ட்டு'கள் பற்றிய தகவல்களை, நிர்வாகத்திலிருக்கும் பார்ப்பனர்கள். தங்களது இனத்தைச் சார்ந்த பார்ப்பனப் பொறியாளர்களிடம் முன்கூட்டியே இரகசியமாகத் தெரிவித்து விடுகின்றனர்! இதனால் 'புராஜெக்ட்'களில் பணியாற்றுவதற்கு பார்ப்பனர்கள் முந்திக் கொண்டு விடுகிறார்கள். பல பெரிய கம்ப்யூட்டர் நிறுவனங்களில் இதற்காகவே - இரகசிய பார்ப்பன சங்கங்கள் செயல்படுகின்றன! சங்கங்களை வெளிப்படையாக நடத்தாமல் - இணையத்தளத்தின் மூலம் தகவல்களைப் பறிமாறிக் கொள்கிறார்கள். தனியார் துறையில் இடஒதுக்கீடுகள் சட்டரீதியாக உறுதி செய்யப்பட்டால், இந்த நிலை ஏற்பட்டிருக்குமா?

### தனியார் நிறுவனங்கள் என்றால் எவை ?

பல இலட்சம் - பல கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கப் பட்டு நடைபெறும் கார்ப்பரேட் நிறுவனங்களையே தனியார் நிறுவனங்களாக நாம் கூறுகிறோம். அதாவது டி.வி.எஸ், டாட்டா, ரிலையன்ஸ் போன்றவற்றையே குறிப்பிடுகிறோம். இவ்வகை தனியார் நிறுவனங்களில் தான் இடஒதுக்கீடு கேட்கிறோம்.

அரசுத்துறையில் இருந்து வேக வேகமாகத் தனியார் கைகளுக்கு மாறி வரும் நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு கேட்கிறோம்.

ஸ்ரீராமன் கூர்மையான கத்தியை எடுத்து வீசி அவன் கழுத்தை வெட்டினார். அந்தச் 'சூத்திரன்' வெட்டப்பட்ட உடனே அக்னி முதலானவர்கள் ஸ்ரீராமனை அடிக்கடி புகழ்ந்து புஷ்ப மழை பெய்தார்கள். தேவ துந்துபிகள் முழங்கின. தேவர்கள் ஸந்தோஷமடைந்து "ஸ்ரீராமா மஹா புத்திசாலியே! நீர் தேவ காரியங்களை நிறை வேற்றினீர். அரிந்தமா, உமக்கு இஷ்டமான வரத்தைக் கேளும். ரகுநந்தனா! ஸ்வர்க்கம் புக உரிமையில்லாத இவன் தவமியற்றக் கண்டு நாங்கள் பயந்தோம். இவனை நீர் வதைத்தீர்; உமது தர்மத்தாலே அந்தச் சூத்திரன் ஸ்வர்க்கத்துக்கு வராதபடி செய்தீர். எங்களுக்கு அதுவே போதுமானது" என்றார்கள்.

ஸ்ரீராமன் கைகளைக் குவித்துக் கெண்டு இந்திரனை நோக்கிச் சாவதானமாய், "தேவர்களே ! இந்திர பகவானே! நீங்கள் என் மேல் கிருபையாயிருந்தால் இறந்து போன அந்தக் குழந்தை பிழைக்க வேண்டும். இது தான் நான் விரும்பும் வரம். என் குற்றத்தினாலே அந்தப் பிராமணக் குழந்தை அகால மிருந்தியுவை அடைந்து எமன் வீட்டுக்குப் போயிற்று . அதைப் பிழைப்பியுங்கள். பொய் பேசக் கூடாது. அந்தக்குழந்தையைப் பிழைக்கச் செய்கிறேன் என்று பிராமணனிடத்தில் பிரதிக்ஞை செய்தேன்". என்று சொன்னார். தேவர்கள் ஸந்தோஷமடைந்து "ஸ்ரீராமா! ஸந்தோஷமாயிரு. அந்தப் பாலன் இப்போதே பிழைத்துத் தன் பந்துக்களுடன் சேர்ந்து கொள்வான். நீ சூத்திரனுடைய சிரஸை வெட்டின அந்த க்ஷணத்திலேயே அந்தக் குழந்தையின் பிராணன் அதன் சரீரத்தில் புகுந்துவிட்டது ".

இது தான் சம்பூகனின் சோகக்கதை! வால்மீகி ராமாயணத்தில் உள்ளது போலவே - பார்ப்பனர் செய்த மொழி பெயர்ப்பிலிருந்து இது எடுக்கப்பட்டது.

'சம்பூகன்' பார்ப்பனர்களின் ஏகபோகமாக இருந்த தவ உரிமையைக் கோரினான்! அதற்குப் பரிசு, மரண தண்டனை!

பார்ப்பனர்களின் ஆதிக்கத்திலிருக்கும் தனியார் துறை நிறுவனங்களில் - சமூக நீதி கேட்டு, 'சூத்திரர்களும்' பஞ்சமர்களும், போராடக் கிளம்பியிருக்கிறார்கள், எனவேதான் இது 'சம்பூகனின் சமூக நீதிப்பயணம்' 'சம்பூகன்' கதைகள் கடந்த காலமாக இருக்கட்டும் ; சமூக நீதிக்கான களம் அமைப்பது - நிகழ்காலத் தேவை! தயாராவோம்!



வந்த பிறகு, மொரார்ஜி பிரதமராக இருந்த நேரத்தில், உள்துறை அமைச்சராக இருந்த சரண்சிங் முயற்சியால் பிற்படுத்தப்பட்டோருக்கான மண்டல் - குழு அமைக்கப்பட்டது. 1980ல் மண்டல் குழு தனது அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்தது. அதன் பிறகு 10 ஆண்டுகள் கழித்து - 1990ல் தான் வி.பி.சி.ங். பிரதமராக வந்தவுடன் பிற்படுத்தப்பட்டோருக்கு மத்திய அரசுப் பணிகளில் 27 சதவீத இடஒதுக்கீடு வழங்கி, பரிந்துரையின் ஒரு பகுதியை மட்டும் அமுல்படுத்தினார். அதற்கே பார்ப்பன சக்திகள், அவரது ஆட்சியைக் கவிழ்த்து விட்டன.

மண்டல் குழு, தனது பரிந்துரைகளை மூன்று பகுதிகளாக பரிந்துரைத்தது. கல்வியிலும், வேலை வாய்ப்புகளிலும் மட்டுமல்லாது, அரசு உதவி பெறும் தனியார் நிறுவனங்களிலும், ( 1 ) பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு (2) பிற்படுத்தப்பட்டோருக்கு அரசு வங்கிகள் மூலம் நிதி உதவி (3) நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலப்பங்கீடு ; என்ற மூன்று முக்கிய பரிந்துரைகளை அது முன்வைத்தது!

அமுல்படுத்தப்பட்ட அரசுப்பணிகளில் 27 சதவீத ஒதுக்கீடு என்பது கூட, இப்போது பார்ப்பன அதிகார வர்க்கத்தால், நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இந்த நிலையில், அரசுத் துறைகள் வேகம் வேகமாக தனியார் மயமாக்கப்பட்டு வருவதால், இடஒதுக்கீடு என்ற கேள்விக்கே இடமில்லாமல் போய்விட்டது.

அரசியல் சட்டம் வழங்கியுள்ள தாழ்த்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடும், தனியார் துறைகளில் இல்லை என்பது மிகவும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இந்திய அரசின் மொத்த வேலை வாய்ப்புகளில் அரசுத்துறை மற்றும் பொதுத் துறைகளில் உள்ள வேலை வாய்ப்புகள் 2 சதவீதம் மட்டும் தான். இந்த 2 சதவீதப் பதவிகளுக்கு வேலை வாய்ப்பு பெறுவதற்கே நாம் போராட வேண்டியிருக்கிறது. ஆனால் புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில், தனியார்மயம், தாராளமயம், உலக மயம் என்ற மயங்களின் படை எடுப்பினால் தொழில்துறைகள் பார்ப்பன பனியா - பன்னாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு விட்டன.

விளைவு ......?

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், அனைவருக்கும் இடஒதுக்கீடு உரிமைகள் பறிபோய்விட்டன! சர்வமும் பார்ப்பன மயமாகிவிட்டது.

# முன்னாள் குடியரசுத் தலைவரின் உரிமைக்குரல்!

மண்டல் காலத்தைவிட - இப்போது, புதிய பொருளாதாரக்கொள்கை என்ற பெயரில், பொதுத்துறை நிறுவனங்கள், தனியார் துறைகளாக்கப்பட்டு வருகின்றன. அதாவது, பொதுத்துறை நிறுவனங்களில், தனியார் முதலீட்டுக்கு தாராளமாக அனுமதி வழங்கப்படுகிறது. சில நிறுவனங்களில் - தனியார் முதலீட்டை விட அரசு முதலீடு குறைவாகிவிட்டது. பல வெளிநாட்டு நிறுவனங்களும், பங்குகளை வாங்கி, அரசுத் துறைகளில் தங்களது உரிமைகளை நிலைநாட்டி வருகின்றன! இதுதவிர, தனியார் நிறுவனங்களும், பன்னாட்டு நிறுவனங்களும் நேரடியாக, தொழில் துவங்க அனுமதிக்கப்படுகின்றன. இந்த நிறுவனங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கோ, பிற்படுத்தப்பட்டவர்களுக்கோ, வேலை வாய்ப்பு உரிமைகள் உறுதி செய்யப்படுவதில்லை! இந்தக் கருத்தை முன்னாள் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் அவர்களே, 2000ம் ஆண்டு குடியரசு தின உரையில் கீழ்க்கண்டவாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

"நமது ஜனநாயகம் அரசியலில் வெற்றி பெற்றுள்ளது என்பது உண்மைதான். ஆனால் சமூக ஜனநாயகம் உருவாகவில்லை. நமது அரசியல் ஜனநாயகத்தில் அனைத்து சமூகத்தினருக்கும் சமவாய்ப்புகள் இல்லை. இது மிகவும் வியப்பாகவே இருக்கிறது. பெண்கள், பட்டியலில் உள்ள சாதியினர் (ஷெட்யூல்டு வகுப்பினர்), பழங்குடியினர் பாகுபாடு காட்டப்படுகிறார்கள். இது நமது அரசியலமைப்பு உறுதி செய்துள்ள ஜனநாயகத்துக்கு எதிரானதாகும்.

அண்மையில் போபாலில் தலித், பழங்குடியினர், சமூக சிந்தனையாளர்கள் மற்றும் களப்பணியாளர்களின் மாநாடு ஒன்று நடைபெற்றது. அம்மாநாடு, தலித் மற்றும் பழங்குடிமக்களுக்கு 21ம் நூற்றாண்டுக்கான புதிய பாதை ஒன்றைக் காட்டியது. அந்த மாநாட்டில் போபால் பிரகடனம் என்ற பிரகடனத்தை வெளியிட்டுள்ளனர். தலித் மற்றும் பழங்குடியினருக்கு நமது அரசியல் சட்டம் வழங்கியுள்ள வளர்ச்சிக்கான திட்டங்களையும், கொள்கைகளையும் அமுல் படுத்துவதற்கு அப்பிரகடனம் அறைகூவல் விடுத்தது. அதோடு மட்டுமல்ல. எல்லாவற்றையும் இழந்து நிற்கும் இம்மக்களுக்கு, அரசு மற்றும் பொது நிறுவனங்களில் மட்டுமின்றி அரசு நிதி மற்றும் உதவி பெறும் அனைத்து தொழில் நிறுவனங்களிலும், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கு பிரதிநிதித்துவம் தரவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

சமத்துவமின்மையாலும், இழப்புகளாலும் அவதிப்படும் ஒடுக்கப்பட்ட சமூகம் முன்னேற்ற மடைந்திட வேண்டும் என்பதால், எதிர்காலத்தில் தனியார்துறையும், சமவாய்ப்புகளைத் தரும் கொள்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இதன் அர்த்தம், தனியார் நிறுவனங்கள் சமதர்மக் கொள்கையை ஏற்க வேண்டும் என்பது அல்ல. அமெரிக்காவில்,



திரேதாயுகத்தில் சொல்ல வேண்டியதில்லை. அதனால்தான் இந்தக் குழந்தை இறந்தது. எவன் ராஜ்ஜியத்தில் அதர்மம் அதிகமோ அந்த அரசன் நிச்சயமாய் நரகத்தை அடைவான். புருஷோத்தமா, உன் ராஜ்யத்தில் முழுமையும் தேடிப்பார். அப்படிச் செய்தால் தர்ம விருத்தியும் உண்டாகும். அரசனே! இந்தக் குழந்தையும் உடனே பிழைக்கும் என்றார்.

*1-19,* நாரத முனிவர் சொன்ன அமிர்தம் போன்ற வசனங்களை ஸ்ரீராமன் கேட்டு ஸந்தோஷ மடைந்து லக்ஷ்மணனை நோக்கி "லக்ஷ்மணா! நீ போய் அந்தப் பிராமணனுக்குத் தேறுதல் சொல், இறந்த குழந்தையின் சரீரத்தைத் தலை கும்பத்தில் இட்டுவை. அது கெடாதபடி சந்தனத் தைலத்தால் நிரப்பி வை. அவயவங்கள் தளராமலும், விகாரப்படாமலும், மயிர் விழாமலுருக்கும்படிக் காப்பாற்று" என்று சொன்னார். சுப லக்ஷணங்களையுடைய லக்ஷ்மணனுக்கு இப்படிக் கட்டளையிட்டு ஸ்ரீராமன் உடனே புஷ்பகத்தை நினைத்தார். ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட அந்தப் புஷ்பகம் ஸ்ரீராமன் கருத்தை யறிந்து உடனே வந்து சேர்ந்தது. ஸ்ரீ ராமனைப் பார்த்து 'நராதிபா! வந்து விட்டேன், என்ன கட்டளை? என்று கூறி அவரை நமஸ்கரித்தது. புஷ்ப கத்தினுடைய மதுர வசனத்தைக் கேட்ட ஸ்ரீராமன் முனிவர்களுக்கு நமஸ்காரம் செய்து அதன் மேல் ஏறிக்கொண்டார்; வில்லம்புகளையும், கத்தியையும் எடுத்துக்கொண்டார். பரத லக்ஷ்மணர்களைப் பட்டணத்தில் வைத்தார்; அங்கங்கே தேடிக்கொண்டு மேற்குத் திசை நோக்கிச் சென்றார்; ஹிமயமலையிருக்கிற வடதிசைக்குப் போனார்; அற்பக் குற்றங்கள் கூட அவ்விடங்களில் இல்லாமையால் கிழக்குத் திசைக்குப் போனார். அங்குக் குற்றங்காணப்படாமையால் ராஜ ரிஷி புத்திரரான ஸ்ரீராமன் தென் திசைக்குப் போனார் ; அங்கே சைவல மலையின் பக்கத்தில் ஒரு தடாகத்தைக் கண்டார்; அதில் தலை கீழாக நின்று கொண்டு பெருந்தவசு செய்கிற ஒருவனைக் கண்டார். ஸ்ரீராமன் அவனிடம் போய்" சுவரு தனே! நீ தன்யன். நீ எந்த ஜாதியிற் பிறந்தாய்? நான் ஸந்தோஷாச்சரியத்துடன் கேட்கிறேன். என் பேர் ஸ்ரீராமன். என் பிதா தசரத மஹா ராஜா. உன் விருப்பம் என்ன? ஸ்வர்க்க லோகம் வேண்டுமா? எதற்காக உக்ர தவம் பண்ணுகிறாய் ? தாபசனே, நீ எவரை ஆக்ரயித்து இந்தத் தவசு செய்கிறாய்? பிராமணனானால் க்ஷேம முண்டாகும். க்ஷத்திரியானானால் ஜபமுண்டாகும். வைசியானா? சூத்திரனா? உண்மையைச் சொல்" என்றார். அவன் தன் ஜாதியையும் தவசின் காரணத்தையும் சொல்ல ஆரம்பித்தான்.

*1-22* பெருங்காரியங்களைச் செய்கிற ஸ்ரீராமனை நோக்கி அந்தத் தபசி சொல்கிறான். "மஹா ராஜாவே! நான் சூத்திரஜாதியில் பிறந்தவன். என் பேர் சம்புகன். புகழுள்ளவரே! இந்தத் தேகத்துடன் தேவத்வம் அடைய விரும்பி யிருக்கிறேன். நான் பொய்சொல்வதில்லை " என்றான். ஸ்ரீராமன் " சம்பூகா! இந்த யுகத்தில சூத்திரர்கள் தவமியற்றும் அதிகாரம் பெற்றிலர். நீ செய்வது தரும விருத்தமாகின்றது. நான் அறம் வழுவாது பரிபாலித்தற்குரியவன். ஆதலின் உன்னை வதைப்பது என் கடமை. நீ யாது கூறுகின்றாய்? " என வினவ அவன் "தேவரீர், கரத்தால் கொலையுண்பது பெரும்பாக்யம் " என,

# பார்ப்பனச் சதிக்குப் பலியான 'சம்பூகன்'

'சம்பூகன்' என்பவன் வால்மீகி ராமாயணத்தில் வரும் ஒரு பாத்திரம்! பிறப்பால் 'சூத்திர'னான சம்பூகன் - மனுதர்மத்துக்கு எதிராக - 'பிராமணர்கள்' மட்டுமே செய்ய வேண்டிய தவத்தை செய்தான் என்று, ராமன், அவன் தலையை வெட்டுவதாக, ராமாயணம் கூறுகிறது. ராமாயணம் ஒரு கற்பனை தான், ஆனால் அது மனுதர்மத்தை வலியுறுத்தும் - ஒருகதை. அதேபோல், பெரும்முதலீட்டில் இயங்கும் தனியார் துறைகளில், தாழ்த்தப்பட்டவரோ, பிற்படுத்தப்பட்டவரோ நுழையமுடியாமல் தடுக்கப்படுகின்றனர், இவர்களை 'சம்பூகன்'களாகவே கருதும் 'ராமர்'கள் ஆட்சி அதிகாரத்தில் இருக்கிறார்கள், எனவேதான் - தனியார் துறையில் இடஒதுக்கீடுகோரும் இயக்கத்துக்கு 'சம்பூகன்' சமூக நீதி இயக்கம் என்ற பெயரை தந்தை பெரியார் திராவிடர்கழகம் தேர்ந்தெடுத்தது.

'சம்பூகன்' கதைக்கான ஆதாரத்தை, இங்கு வெளியிடுகிறோம்.
வால்மீகி ராமாயணம் உத்தர காண்டம்
திரிசிரபுரம் திரு. அ. சிவாநந்த ஸாகா யோகீச்வரர்
மொழி பெயர்ப்பிலிருந்து

*1-19* சத்ருக்கனை மதுராபுரிக்கு அனுப்பிவிட்டு, ஸ்ரீராமன் சந்தோஷமாய் தம்பிகளுடன் ராஜ்யத்தை தர்மமாய்ப் பரிபாலித்துக் கொண்டிருந்தார். கொஞ்ச நாள் கழித்தபின், ஒரு நாள் ஒரு கிழப் பிராமணன் இறந்து போன தன் குழந்தை ஒன்றை எடுத்துக் கொண்டு அரண்மனை வாயிலில் வந்து நின்றான் ... ஸ்ரீராமா உம்மைச் சரணடைந்தோம். இப்பொழுது இக்ஷ்வாகு தேசம் திக்கற்றுப் போய் விட்டது. ஸ்ரீராமன் ராஜாவாகயிருக்கையில் குழந்தைகளுக்கு மிருத்தியும் வந்தது. பட்டணங்களிலாவது கிராமங்களிலாவது ஜனங்கள் தகாத காரியங்கள் செய்தால் அரசன் அவர்களைக் கண்டுபிடித்து தகுந்தபடி நடக்கச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் இப்படிப்பட்ட அகால மரணம் உண்டாகும். எப்படியானாலும் ராஜாவின் குற்றத்தினாலேயே இப்படி நேரிடுவது நிச்சயம் என்று ஸ்ரீ ராமனை நித்தித்து அந்தக் கிழப் பிராமணன் குழந்தையைக் கட்டிக் கொண்டு அழுதான்.

மந்திரிகளையும் வஸிஸ்டர் வாம தேவர்களையும் தம்பிகளையும் நகரத்தாரையும் ஸ்ரீராமன் அழைப்பித்தார். மார்க்கண்டேயர், மௌத்கல்யர், வாமதேவர், கராசிபர், காத்யானர், ஜாபாலி, கௌதமர், நாரதர் முதலானவர்கள் வந்து உசிதமான ஆசனங்களில் உட்கார்ந்தார்கள் .... நாரதர் கூறியதாவது ; அரசனே ! கிருதாயுதகம் திரேதாயுகம், துவாபரயுகம் ஆகிய இந்த மூன்று யுகங்களிலும் சூத்திரர்களுக்குத் தவம்புரிய அதிகாரமில்லை. தவ சிரேஷ்டரே! உமது அரசாட்சியில் ஈன ஜாதியானான சூத்திரன் உக்கிரமான தபசு செய்கிறான். கலியகத்தில் தான் சூத்திரர்கள் தவம் செய்வார்கள். துவா பரயுகத்தில் சூத்திரன் தவம் செய்தால் அவன் மஹாபாபியாவான் என்றால்



பன்மைத்துவம் ; புறக்கணிக்கப்படும் பிரிவினருக்கான வேலை வாய்ப்பு உறுதி ; போன்ற சட்டங்கள் அமுலில் உள்ளன. அமெரிக்க அரசு, இத்தகைய சட்டங்களை அமுல் படுத்துவது போல், இங்கும் ஏதாவது செய்தாக வேண்டும். எனது, சகுடிமக்களே ! இந்த சமூகப் பிரச்சனைகளை நான் எதற்காக சுட்டிக் காட்டுகிறேன் தெரியுமா? நமது ஜனநாயகம் மகத்தானதாகவும், மக்கள் பிரச்சனைகளுக்கு முகம் தரக்கூடியதாகவும் அமைய வேண்டுமானால், இந்த சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகளின் பக்கம், நாம் உடனடியாகக் கவனத்தை செலுத்த வேண்டும் என்பதற்காகத்தான்". என்று குடியரசுத் தலைவர் தமது உரையில் குறிப்பிட்டார் ; தனியார் துறைகளில் சமூகநீதி மறுக்கப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு செய்வதுதான், உண்மையான ஜனநாயகத்தின் அர்த்தம் என்பதை அழுத்தம் திருத்தமாக குடியரசுத்தலைவரே தமது உரையில், சுட்டிக் காட்டியிருப்பதிலிருந்து, இப்பிரச்சனையின் முக்கியத்துவம் விளங்கும்.

குடியரசுத் தலைவர் சுட்டிக்காட்டியுள்ள போபால் மாநாடு என்பது என்ன? ம.பி. மாநில அரசு 2002, ஜன. 12,13, தேதிகளில் போபாலில் ஒரு மாநாட்டைக் கூட்டியது, அம்மாநாட்டில் நாடு முழுவதிலிருந்தும் சுமார் 250 தலித் அறிஞர்களும், களப் பணியாளர்களும் கலந்து கொண்டனர். அம்மாநாட்டில் பல்வேறு கருத்துகள் விவாதிக்கப்பட்டு, இறுதியில் ஒரு பிரகடனம் தயாரிக்கப்பட்டது. ம.பி. முதலமைச்சர் திக் விஜய்சிங் முயற்சியால் கூட்டப்பட்ட இம்மாநாட்டில் ம.பி. அரசு சார்பாகவே, பிரகடனமும் வெளியிடப்பட்டது.

அந்தப் பிரகடனம் தலித் மக்களுக்கு. மூலதனம், சந்தைப் பொருளாதாரம், பொதுச் சொத்துகள் ஆகியவற்றில் உரிய பங்கு தரவேண்டும் என்று வலியுறுத்தியதோடு, தொழில் தொடங்குவதில் ஊக்கம், வன்கொடுமைகளுக்கு உள்ளாகும் பகுதிகளில் தலித் மக்களுக்கு ஆயுதம் வழங்குதல், தலித் பெண்களின் பிரச்சனைகளை, ஏனைய பெண்களின் பிரச்சனைகளிலிருந்து தனித்துப் பிரித்துப் பார்த்து அணுகுதல், என்பது போன்ற கருத்தாக்கங்களோடு தனியார் துறைகளிலும் உரிய பிரதிநிதித்துவம் தர வேண்டும் என்று வலியுறுத்தியது. இதைத்தான் முன்னாள் குடியரசுத்தலைவர் கே. ஆர். நாராயணன் தமது குடியரசு நாள் உரையில், குறிப்பிட்டார். குடியரசுத் தலைவர் தமது உரையில் சுட்டிக் காட்டியுள்ளது போல் அமெரிக்காவில் - தனியார் துறைகளில், கருப்பர்களுக்கு, உரிய பிரதிநிதித்துவம் வழங்கும் முறை, சட்ட ரீதியாகவே கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதே போன்ற நடவடிக்கைகளையும் நமது அரசும் ஏன் செய்யக்கூடாது என்பதுதான், குடியரசுத்தலைவர் எழுப்பிய கேள்வி. அமெரிக்காவில், கருப்பர்களுக்கு இடஒதுக்கீடு எப்படி நடைமுறைப்படுத்தப்படுகிறது ?

# அமெரிக்காவில் கறுப்பர் உரிமைச் சட்டங்கள்

அமெரிக்காவில் கல்வியும், தொழிலும் தனியார்வசமே உள்ளன. அங்குள்ள பல்கலைக்கழகங்கள் கூட தனியார் நடத்துபவைதான்! அங்கே கருப்பர்களுக்கும், இதர சிறுபான்மையினருக்கும், அனைத்து துறைகளிலும், வேலை வாய்ப்பு உரிமைகள் வழங்கப்படுகின்றன! அதற்காக பல்வேறு சட்டங்கள் அமுலில் உள்ளன. தலித் பிரச்சனைகள் பற்றி பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளை வழங்கிவரும் கெய்ல் ஓம்வெல்ட் இதுபற்றி “இந்து” நாளேட்டில் எழுதியுள்ள கட்டுரைகளில் பல்வேறு தகவல்களை சுட்டிக் காட்டியிருக்கிறார்.

அமெரிக்காவில் கருப்பர்களுக்கும், சிறுபான்மையினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படும் திட்டத்துக்கு ‘உறுதியாக்கும் செயல்பாடு’ (Affirmative Action) என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். வர்த்தக நிறுவனங்கள், உணவகங்கள், விற்பனை நிலையங்கள், ரயில்கள், விமானங்கள், சுற்றுலா நிறுவனங்கள் என்று எந்தத்துறைகளுக்குச் சென்றாலும் அங்கு வெள்ளை நிறத்தவர்களோடு கறுப்பர்களும் இருப்பதை அமெரிக்காவில் காண முடியும் உதாரணமாக ‘மெக்டோனால்ஸ்’ என்ற அமெரிக்க நிறுவனம் ‘விரைவு உணவு’ விடுதிகளை (Fast Food) உலகம் முழுதும் சங்கிலித் தொடர் நிறுவனங்களாக நடத்தி வருகிறது. இங்கே வெள்ளை நிறத்தவர்கள் கியுவில் நின்று, கறுப்பர் இன இளைஞர்களிடமிருந்து உணவுப் பொருள்களை வாங்கி - சாப்பிடும் சுயசேவைப் பிரிவுகளை ஏராளமாகப் பார்க்க முடியும். பல்வேறு இனத்தவரும் பங்கு பெறும் ஒரு நிறுவனமாக இருந்தால் தான், பல்வேறு இனத்தைச் சார்ந்தவர்களும் பொருள்களை வாங்குவதற்கு வருவார்கள் என்ற கருத்தோட்டம் - அங்கு தொழில் துறையிலும் வர்த்தகத்திலும் பின்பற்றப் படுகிறது. இந்த பன்முகத் தன்மைதான் ஒரு நிறுவனத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் என்ற உண்மையை - அந்த நாடுகளின் தொழில், வர்த்தக நிறுவனங்கள் உணர்ந்துள்ளன! அதோடு, அரசாங்கத்தின் சட்டங்களும் - இதற்கு பாதுகாப்பாக இருக்கின்றன. இந்தியாவில் தலித் மக்கள். நீண்ட நெடுங்காலமாக தீண்டாமைக்கு உள்ளாக்கப்பட்டு சமூக, பொருளாதார நிலையில் புறக்கணிக்கப்பட்டவர்களாக இருந்தனர்! கல்வி, வேலை வாய்ப்புகளில், இடஒதுக்கீடு உரிமைகள், தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர் முயற்சிகளால் கிடைத்த பிறகு, தடைகள் நீங்கத் தொடங்கின. ஆனால், தனியார் நிறுவனங்களில் தாழ்த்தப்பட்டோரோ, பிற்படுத்தப்பட்டோரோ நுழைய முடியவில்லை! இந்நிறுவனங்கள் இப்போது யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றன? பார்ப்பனர்கள் - மார்வாடிகள் - பனியாக்களின் ஆதிக்கத்தில் தான் இருக்கின்றன! பலவெளி நாட்டுக் கம்பெனிகள் இப்போது, இவர்களோடு மூலதனம் போட்டு, பங்குகளை வாங்கி தங்களையும் இணைத்துக் கொண்டு வருகின்றன! ஆனால் இந்நிறுவனங்களில் வேலை வாய்ப்புகள் முழுதும் பார்ப்பனர்களுக்குத் தான்!



- தாழ்த்தப்பட்டோரை திருமணம் புரியும் கலப்புமணத் தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு தனி இடஒதுக்கீடு செய்ய வேண்டும்.

- இடஒதுக்கீட்டை அமுல்படுத்த மறுப்பவருக்கு அல்லது தவறுபவருக்கு சிறைத்தண்டனை உள்ளிட்ட தண்டனைகளைத் தரும் வகையில் இடஒதுக்கீடு சட்டத்திலேயே திருத்தம் செய்ய வேண்டும்.

- என்று மத்திய அரசு நியமித்த நீதிபதி வெங்கடாசலய்யா குழுவும் பரிந்துரை செய்துள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, பெங்களூரில் நடந்த அதன் செயற்குழுவில் தனியார் துறையில் இடஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

தமிழ்நாட்டில் ‘புதிய தமிழகம்’ கட்சி சார்பாக அதன் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி இந்தப் பிரச்சனையை முன்வைத்து, மாநாடுகளையும் - இயக்கங்களையும் நடத்தி வருகிறார்!

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ், நீதிபதி வெங்கடாசலய்யா குழுவின் பரிந்துரைகளை விளக்கும் கருத்தரங்கு ஒன்றை சென்னையில் அக்குழுவின் உறுப்பினர்களையே அழைத்து நடத்தியுள்ளதோடு, தனியார் துறையில் இடஒதுக்கீடு கோரும் இயக்கத்தை துவக்கப் போவதாகவும் அறிவித்துள்ளார். இதற்காக டெல்லியிலேயே ஒரு மாநாடு நடத்தவும் திட்டமிட்டு வருகிறார்.

தந்தை பெரியார் திராவிடர் கழகம் வலியுறுத்தி முன்மொழிந்த இந்த சமூகநீதி கோரிக்கை, இப்போது வலிமையடைந்துள்ளது. 2002 மார்ச் 31ம் தேதி திண்டுக்கல்லில் கூடிய தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் மாநிலக் கலந்துரையாடல் கூட்டத்தில் தனியார் துறையில் இடஒதுக்கீட்டை வலியுறுத்தி தமிழகம் தழுவிய பிரச்சார இயக்கம் நடத்த முடிவு செய்யப்பட்டது. அதற்கு ‘சம்பூகன் சமூக நீதிப்’ பயணம் என்று பெயர் சூட்டவும் தீர்மானிக்கப்பட்டது. இந்தப் பயணத்துக்கு சம்பூகன் பெயரைத் தேர்வு செய்தது ஏன்?

# “வெங்கடாசலய்யா” குழு பரிந்துரை!

தனியார் துறையில் -தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்ற முழக்கம் - வலிமையடைந்து வருகிறது. தலித் அமைப்புகள் மற்றும் ஒடுக்கப்பட்டோர் அமைப்புகள் மட்டும் இந்த முழக்கத்தை முன்வைக்கவில்லை!

கடந்த ஜனவரி 12,13 தேதிகளில் - ம.பி. மாநிலம் போபாலில் மாநில முதல்வர் திக்விஜய் சிங், தலித் சிந்தனையாளர்களின் மாநாடு கூட்டியதுபற்றி கடந்த அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தோம். வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்த போபால் பிரகடனத்தின் முக்கிய அம்சம் தனியார் துறைகளில் தாழ்த்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு செய்யப்படவேண்டும் என்பதாகும். ம.பி. முதல்வர் திக் விஜய் சிங், அந்தப் பிரகடனத்தை செயல்படுத்தத் துவங்கியிருக்கிறார். முதல் கட்டமாக, தலித் சமூகத்தினரை, தலைமை நிர்வாகிகளாக அல்லது உரிமையாளர்களாகக் கொண்ட தொழில் நிறுவனங்களிடமிருந்துதான், அரசுக்குத் தேவையான 30 சதவீதம் பொருள்களை வாங்குவது என்ற முடிவினை எடுத்துள்ளார். அம்மாநில அரசு ஆண்டு ஒன்றுக்கு ரூ.1000 கோடி மதிப்புள்ள பொருள்களை, அரசு அலுவலகங்களுக்காக வாங்குகிறது. மாநில அரசின் இந்த முடிவினால், பல தனியார் நிறுவனங்கள், தங்களுடைய வியாபார நலனுக்காகவாவது தலித் மக்களை உயர் அதிகாரிகளாக நியமிக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியுள்ளன. அடுத்து, மத்திய மாநில உறவுகள் பற்றி, வாஜ்பாய் ஆட்சி நியமித்த வெங்கடாசலய்யா ஆணையமும், தனியார் துறைகளில் இடஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளது.

இது பற்றி நீதிபதி வெங்கடாசலய்யா குழு அளித்துள்ள முக்கிய பரிந்துரைகளின் விவரம்:

- ஒரு பொதுத்துறை நிறுவனம், தனியார் மயமாக்கப்பட்டாலோ, அல்லது அதன் பங்குகள் தனியாருக்கு விற்கப்பட்டாலோ ஏற்கனவே பொதுத்துறையில் பின்பற்றி வந்த இடஒதுக்கீட்டை வழங்க வேண்டும்.

- நீதித்துறையிலும் இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

- முன்னேறிய சமூகத்தினருடன் போட்டியிடக் கூடிய அளவுக்கு தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கு புதிய சமுதாயக் கொள்கைகளை உருவாக்க வேண்டும்.

- தலித்துகள் - பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டின் அளவை நிர்ணயிக்கும் உரிமையும், சட்டம் இயற்றும் உரிமையும் மாநில சட்ட மன்றங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.



இந்தியாவின் மிகப்பெரும் முதலாளிகள் வரிசையில் இடம் பெற்றுள்ள டி.வி.எஸ். நிறுவனம் - டயர் தயாரிப்பு, ஸ்கூட்டர் தயாரிப்பு, கம்ப்யூட்டர் தயாரிப்பு என்று பல்வேறு தொழில் நிறுவனங்களை நடத்துகிறது. இவைகளில் வேலை வாய்ப்புகள் முழுதுமே பார்ப்பனர்களுக்குத்தான் ! நிர்வாகம் விரும்பினால், தான் தாழ்த்தப்பட்டவருக்கோ, பிற்படுத்தப்பட்டோருக்கோ வாய்ப்புகளைத் தர முடியும் விரும்பாவிட்டால், எவரும் உரிமை கோர முடியாது. ஆனால் அமெரிக்காவில் இது போன்று வகுப்பு வாதமாக - சாதி வெறியோடு செயல்பட முடியாது. காலம்காலமாக புறக்கணிக்கப்பட்ட கறுப்பர் இனத்துக்கு, கட்டாயமாக வேலை வாய்ப்புகளைத் தரவேண்டும்! “உறுதியாக்கும் செயல்பாடு” என்பது போலவே “ஒதுக்கி வைத்தலுக்கு ஈடுகட்டுதல்” என்ற ஒரு கருத்தாக்கமும் அங்கு சொல்லப்படுகிறது. ஆங்கிலத்தில் ‘Compulsory Discrimination” என்கிறார்கள். அதாவது, இனத்தின் காரணமாக, நீண்ட காலமாக உரிமைகள் மறுக்கப்பட்டு வந்த கறுப்பர்களுக்கு, இழைக்கப்பட்ட அநீதியை, கட்டாயமாக சரிசெய்து அதை ஈடுகட்ட வேண்டும் என்பதே இதன் அர்த்தம்.

1950, 60களில் - அமெரிக்காவில், கறுப்பர்களின் உரிமைப் போராட்டம் வெடித்தது. இதுபற்றி ஆராய 1967ல் ஜெர்னர் ஆணையம் அமைக்கப்பட்டது. அமெரிக்கா, அமெரிக்கர்களின் ஒரே தேசமாக உருவெடுக்காமல், கருப்பர்கள் நடத்தும் போராட்டங்களால், பல்வேறு தேசங்களாகப் பிரிந்து விடுமோ என்ற அச்சம் வெள்ளையர்களுக்கு ஏற்பட்டதால், கறுப்பர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை அகற்றுவதன் மூலமாகவே, அவர்களிடம் அமெரிக்கர்கள் என்ற உணர்வை ஏற்படுத்த முடியும் என்று கருதினர். அதற்காக உருவாக்கியதுதான் இந்த ஆணையம். ‘அமெரிக்க சமூகம், கருப்பர் - வெள்ளையர் சமூகங்களாக தனித்தனியாகவே பிளவுண்டு கிடக்கிறது’ என்ற உண்மையை அந்த ஆணையம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டி எச்சரித்தது.

வரலாற்று ரீதியாக இழைக்கப்பட்ட அநீதிகளைக் களைய வேண்டும் என்ற சமூகவியல் பார்வை அமெரிக்கர்களுக்கு வந்தது போல, இங்கே உள்ள பார்ப்பனர்களுக்கு வந்ததா? அனைவருக்கும் கல்வியைத் தராதே என்பதையே தங்களின் தர்மமாகக் கருதி செயல்பட்டார்கள். ‘சூத்திரனு’க்கு எதைக் கொடுத்தாலும் கல்வியைக் கொடுக்கக்கூடாது என்று ‘மனு’வின் ‘நீதி’ கூறியது. அந்த ‘மனுநீதி’ இப்போதும் இங்கே தடை செய்யப்படவில்லை. அந்த மனுநீதி அடிப்படையில் தான் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை பார்ப்பனர்கள் எதிர்த்தார்கள்.

வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற சமூகநீதித்திட்டத்தை தமிழ்நாட்டில் அமுல்படுத்துவதற்குக் காரணமாக இருந்த தலைவர் பெரியார். ‘சுதந்திர’த்துக்கு முன், சென்னை மாகாணத்தில் ஆட்சியிலிருந்த ‘தென்னிந்திய நல உரிமைச்சங்கம்’ என்ற நீதிக்கட்சி ஆட்சி, தந்தை பெரியாரின் வற்புறுத்தலால் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை அமுல்படுத்தியது 1947ல் ‘சுதந்திரம்’ வந்தவுடன் பார்ப்பனர்கள் போர்க்கொடி உயர்த்தி விட்டார்கள்! வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை எதிர்த்து நீதிமன்றத்துக்குப் போய் அது செல்லாது என்று தீர்ப்பு வாங்கி விட்டார்கள். அதற்குப் பிறகு தந்தை பெரியார் நடத்திய

போராட்டத்தால், அரசியல் சட்டம் முதன் முதலாகத் திருத்தப்பட்டு, இடஒதுக்கீடு அமுலுக்கு வந்தது என்றாலும் கூட, அமெரிக்கச் சமூகம் இந்தப் பிரச்சனையை அணுகுவதற்கும், இந்த நாட்டுப் பார்ப்பனர்கள் இந்தப் பிரச்சனையைப் பார்ப்பதற்கும் உள்ள வேறுபாட்டை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

கருப்பர்கள் மற்றும் சிறுபான்மையினருக்கான உரிமைகளை வழங்குவதற்கு அமெரிக்காவில் எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன?

அமெரிக்காவில் கருப்பர்கள், ஸ்பானியர்கள், பழங்குடி அமெரிக்கர்கள் என்ற சிறுபான்மை சமூகத்தினர் 18 சதவீதம் பேர் இருக்கிறார்கள். இந்த சிறுபான்மை சமூகத்தினரின் தொழில் வளர்ச்சிக்காக, சிறுபான்மையினர் தொழில் வளர்ச்சிக்கான நிறுவனம் ஒன்றை 1969ம்ஆண்டில் குடியரசுத்தலைவராக இருந்த ஜான்சன் தொடங்கினார். மூத்த அதிகாரிகள், நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள், சிறுபான்மைச் சமூகத்தைச் சார்ந்த வணிகர்கள், தனியார் தொழில்துறையின் பிரதிநிதிகள் இந்த அமைப்பின் உறுப்பினர்கள், கருப்பர்கள் உள்ளிட்ட சிறுபான்மை சமூகத்தினருக்கு தொழில் வணிகத் துறைகளில் உரிய பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துவதே, இந்த அமைப்பின் முக்கிய நடவடிக்கையாகும். அமெரிக்காவில் வெள்ளையர்கள் பெரும் மூலதனத்தில் தொழில் வணிகங்களை நடத்துகிறார்கள். இந்த நிலை நீடிப்பது நல்லதல்ல என்று அமெரிக்கா கருதியது.

கருப்பர்கள், மற்றும் சிறுபான்மையினரும் மூலதனம் போடுபவர்களாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் மேற்குறிப்பிட்ட அமைப்பு துவங்கப்பட்டது. இப்படி சிறுபான்மையினர், மூலதனத்தில் பங்கு பெறாவிட்டால், நாட்டில் உண்மையான பொருளாதார வளர்ச்சியைப் பாதுகாக்க முடியாது என்று அமெரிக்க அரசாங்கம் கருதுகிறது. ஆனால் இந்தியாவில் என்ன நிலைமை?

இங்கே நடக்கும் தொழில்களுக்கான மூலதனத்தில் தாழ்த்தப்பட்டவரோ, பிற்படுத்தப்பட்டவரோ, சிறுபான்மையினரோ கிடையாது! மூலதனம் பார்ப்பன, பனியாக்கள், பன்னாட்டு நிறுவனங்களிடமே இருக்கிறது. அது மட்டுமல்ல, இந்தத் தனியார் நிறுவனங்களில் தாழ்த்தப்பட்டவர்கள், சிறுபான்மையினர், பிற்படுத்தப்பட்டவருக்கு வேலை வாய்ப்புகள் கூட இல்லை. ஏற்கனவே பொதுத்துறை நிறுவனங்களாக அரசு கட்டுப்பாட்டின் கீழ் இருந்த அமைப்புகள் பலவும் தனியார் முதலீட்டுக்கு வழி திறந்துவிட்டதால் ஏற்கனவே தலித்மக்களுக்கு இருந்த இடஒதுக்கீடுகளும் பறிபோய்விட்டன.

ஒரு உதாரணத்தைக் குறிப்பிடுவோம்! தகவல் தொழில் நுட்பம் என்பது - மிகவேகமாக வளர்ந்து வரும் துறை! நவீன மின்னணு சாதனங்கள் தகவல் தொழில் நுட்பத் துறைகளில் குவிந்து வருகின்றன. உலகத்தை வலைப்பின்னலாக இணைக்கும் 'இன்டர்நெட்' யுகத்தில் கம்ப்யூட்டர் புரட்சிகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. ஏராளமான வேலை வாய்ப்புகள் உள்ள



அறிவிப்பாளர்களாகவும், பேட்டியாளர்களாகவும் வருகிற ஆண்கள் பெண்கள் எல்லாம் பார்ப்பன உயர் சாதிப் பிரிவினராகவே தோற்றத்திலும், உச்சரிப்பிலும் காணப்படுகிறார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் பிரச்சனைகளோ, வாழ்வியலோ, பேச்சுகளோ இதிலே காண முடியவில்லை! சிதைந்து, உருக்குலைந்து போன பார்ப்பன மொழிகளைப் பேசுவதற்கு வெட்கப்படுவதில்லை. அதைப் பெருமையாகவே கருதுகிறார்கள். ஆனால் வெளிநாட்டு தொலைக்காட்சிகளில் கருப்பர் இனமக்கள், பூர்வக்குடி மக்களின் இசை, கலாச்சாரங்கள் புறக்கணிக்கப்படுவது இல்லை. குறிப்பாக அமெரிக்கத் தொலைக்காட்சியில் கருப்பர்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் தொடர்களும் நிகழ்ச்சிகளும் ஏராளமாக இடம் பெறுகின்றன. ஒப்ராவின்ஃப்ரே எனும் கருப்புப் பெண்மணிதான் உலகிலேயே தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு அதிக ஊதியம் பெறும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர். அவர் ஒரு கறுப்பர் இனப் பெண்மணி! பி.பி.சி.யில் ஒரு மணி நேரம் தோன்றி பேசுவதற்கு, அவர் பெறும் ஊதியம் ஒரு மில்லியன் டாலர் ; இவ்வளவு கூடுதல் தொகையைத் தந்து, அந்த நிறுவனங்கள் இவர்களை நியமித்திருப்பது ஏன்? அனைத்து சமூகத்தினருக்கும் உரிய வாய்ப்புக்களைத் தரும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தான் அனைத்துத்தரப்பினரும் விரும்பிப் பார்ப்பார்கள் என்பதால்தான், அனைத்துப் பிரிவைச் சார்ந்த கட்டுரையாளர்களும், செய்தியாளர்களும் எழுதுகிற பத்திரிகைகளைத்தான், அனைத்துப் பிரிவினரும் வாங்கிப் படிப்பார்கள் என்ற நிலை, அந்த நாடுகளில் இருக்கிறது. அத்தகைய ஒரு மாற்றத்தை இங்கு கொண்டு வர வேண்டாமா?

ஊடகங்களில் பணியாற்றும் பத்திரிக்கைகளுக்கு அதிக விளம்பரங்களை, அரசாங்கங்களே தருகின்றன! பத்திரிக்கையாளர்களுக்கு இலவசப் பயணம், இலவச மருத்துவம், ஓய்வூதியம் போன்ற பல்வேறு சலுகைகளை அரசாங்கங்கள் தான் வழங்குகின்றன. எனவே இந்தத் தகவல் தொடர்பு நிறுவனங்களில் செய்தியாளர்களாக, துணை ஆசிரியர்களாக, ஆசிரியர்கள் குழுவில் அதிகாரம் படைத்த பதவியாளர்களாக, தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மையினர், பெண்கள் பிற்படுத்தப்பட்டோர் போன்ற பிரிவினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் தந்தால் தான், இந்த அரசுச் சலுகைகள் கிடைக்கும் என்று அரசு நிபந்தனை விதிக்கக்கூடாதா?

பன்னாட்டு நிறுவனங்கள் நடத்தப் போகும் பத்திரிகைகளிலும், அரசு இந்த நிபந்தனை விதிக்கலாமே! இந்தக் கோரிக்கைகளை உறுதியாக வலியுறுத்த வேண்டிய நேரம் இப்போது வந்துவிட்டது.

# தொலைக்காட்சிகளில் என்ன நிலை?

தந்தை பெரியார் இயக்கத்தின் பயனாய் தமிழகத்தில் பார்ப்பனரல்லாத பிற்படுத்தப்பட்டோர் பத்திரிக்கைத் துறைகளில் வளர்ந்திருக்கிறார்கள் என்பது உண்மை. இந்தியாவின் ஏனைய மாநிலங்களில் இந்த நிலை இல்லை என்றே கூறலாம். தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் பத்திரிகைத் துறைகளில் ஓரளவு நுழைந்த பிறகும், இந்தப் பத்திரிக்கைகள் பார்ப்பன ஏடுகளின் வழியிலேயே தங்களது பத்திரிக்கைகளை நடத்த முயலுகின்றன. சமூகப் பார்வைகள் பின்தங்கிப் போய். வியாபார நலன்களே முன்னிறுத்தப்படுகின்றன.

பார்ப்பனர்களின் பத்திரிக்கை நிறுவனங்களானாலும் சரி ; பிற்படுத்தப்பட்டோர் பத்திரிக்கை நிறுவனங்களானும் சரி, தலித் பத்திரிக்கையாளர்களைப் பார்க்க முடியாது. தமிழகத்திலே இந்த நிலை என்றால், ஏனைய மாநிலங்களைப் பற்றிச் சொல்லத் தேவை இல்லை. ஊடகங்கள் தான் மக்களின் கருத்துக்களைத் தீர்மானிக்கும் சக்திகளாக விளங்குகின்றன. அதோடு அதிகார பீடங்களாகவும் அவைகள் மாறிவருகின்றன. இத்தகைய ஒரு நிறுவனத்தில் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் இருப்பது அவசியமல்லவா?

மத்திய அரசு பத்திரிகைத் துறையில் 26 சதவீதம் வெளிநாட்டு நிறுவனங்கள் முதலீடு செய்ய அனுமதித்துள்ளதற்கு, பார்ப்பன ஏடுகள் ஏன் பதற வேண்டும்? ஏற்கனவே தொலைக்காட்சிகளில் அன்னிய நிறுவனங்கள் நுழைந்துவிட்டன! சோனி, ஸ்டார் பிளஸ் போன்ற வெளிநாட்டு மூலதனங்களில் நடக்கும் தொலைக்காட்சி நிறுவனங்கள் இந்தியாவிலே தங்களது ஒளிபரப்பு மய்யங்களைத் துவக்கிவிட்டன. சி.என்.என். பி.பி.சி. போன்ற வெளிநாட்டு நிறுவனங்களின் ஒளிபரப்பை, ஒவ்வொரு வீடுகளிலும் பார்க்கக்கூடிய வசதிகள் உள்ளன. ஸ்டார் பிளஸ் என்ற வெளிநாட்டு நிறுவனம், விஜய் தொலைக்காட்சியில், தமிழ்ச் செய்திப் பிரிவையே நடத்திக் கொண்டிருக்கிறது.

குஜராத்தில் 'இந்துத்துவா' பார்ப்பன சக்திகள், நடத்திய இனப்படுகொலைகளை மக்களுக்கு மறைக்காமல் ஒளிப்பரப்பியது, ஸ்டார் பிளஸ், தொலைக்காட்சிதான்! 'தூர்தர்'ஷனும் பொதிகையும், 'சன்'னும், 'ஜெயா'வும் இந்துத்துவா ஆட்சிகளின் கொடூரங்களை உள்ளது உள்ளபடி ஒளிபரப்பத் தயாராக இல்லை!

காஷ்மீர் பிரச்சனையிலும் ஒரளவு உண்மையான செய்திகளை ஒளிபரப்புவதும் இந்த வெளிநாட்டு நிறுவனங்கள் தான்!

தொலைக்காட்சிகளில் இடம் பெறும் சீரியல்கள், நிகழ்ச்சிகளில் எல்லாம் பார்ப்பனியக் கலாச்சாரங்களைத் தான் பார்க்க முடிகிறது.



இந்தத் துறையில், பார்ப்பனர்கள் ஆதிக்கம் தான் முழுமையாக தலை விரித்தாடுகிறது. 'நாஸ்காம்' என்ற முதலாளிகள் அமைப்பு, அண்மையில் ஒரு அறிவிப்பை வெளியிட்டது. கடந்த 2001 - 2002ம் ஆண்டுகளில், தகவல் தொழில் நுட்பத் துறைகளில் 94,000 பேருக்கு புதிய வேலைவாய்ப்புகள் தரப்பட்டதாக, அந்த அமைப்பு கூறியுள்ளது. இதில் தாழ்த்தப்பட்டோருக்கோ, பிற்படுத்தப்பட்டோருக்கோ ஒதுக்கீடுகள் எதுவும் இல்லை! இதுவே அமெரிக்காவாக இருந்திருக்குமானல், இந்த 94,000 வேலைகளில் கருப்பர் களுக்கும்,ஸ்பானியர்களுக்கும்,எவ்வளவுஇடங்கள்தரப்பட்டனஎன்பதுகண்காணிக் கப்பட்டிருக்கும். அதே போல், தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைத் துறைகளில் 1 லட்சத்து 10 ஆயிரம் பேர் வேலை பார்க்கிறார்கள். இந்தப் பணிகளிலும் பார்ப்பனர்களும் - பனியாக்களும்தான் நிறைந்து கிடக்கிறார்கள். 'தலித்' ஒருவரைக் கூட கண்டுபிடிக்க முடியாது. ஆக, தகவல் தொழில் நுட்பத் துறை, அது தொடர்பான சேவைத் துறைகளில் 2 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ள நிலையில் தனியார் துறைக்கான இடஒதுக்கீடு சட்டம் இருந்திருக்குமானால், 'தலித்' பிற்படுத்தப்பட்டோருக்கு உரிய பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கும் ! அமெரிக்காவிலோ மூலதனத்திலேயே கருப்பர்களுக்கும், சிறுபான்மையினருக்கும் பங்கு இருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்துகிறார்கள்! ஆனால் இந்திய தேசியத்தைக் கட்டி ஆளும் பார்ப்பன - பனியா ஆட்சியில் இந்த நிறுவனங்களில் ஒடுக்கப்பட்ட சமூகத்தினருக்கு வேலைவாய்ப்புகள் கூட மறுக்கப்படுகின்றன.

அமெரிக்காவில் கறுப்பர்கள் தொழில் வணிகத்திலும், பொருளாதாரத்திலும் என்ன நிலையில் உள்ளார்கள் என்பதை கெய்ல் ஓம்வெட், 'இந்து' பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் விளக்குகிறார். 100 மில்லியன் டாலருக்கு மேல் சொத்துடைய அமெரிக்கர்களில் 15க்கும் மேற்பட்டோர் கருப்பர்கள். 1997ம் ஆண்டு அமெரிக்க அரசின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அலுவலகம் நடத்திய ஒரு ஆய்வின்படி 172 கோடி தொழில் வணிக நிறுவனங்களில், கருப்பர்கள் மற்றும் சிறுபான்மையினருக்குச் சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை 21.49 லட்சம் ( 12.5 சதவீதம் ) மொத்தமுள்ள வணிக வரவு செலவில் 6.3 சதவீதம் சிறுபான்மையினருடையது என்று அந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இங்கே தாழ்த்தப்பட்டோர் நிலை என்ன ? சிறுதொழில் துறைகளில் கூட தலித்மக்கள் கிடையாது. தொலைபேசி வைத்திருப்போர் - கார் வைத்திருப்போர் பட்டியலில் தலித் மக்களைத் தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டும்! முதலீடு செய்து தொழில் துவங்கும் வாய்ப்புகள் கிடைப்பதற்கு முன்னால், குறைந்தது தனியார் நிறுவனங்களில், இவர்களின் வேலை வாய்ப்புகளாவது உறுதி செய்யப்பட வேண்டுமல்லவா? அனைத்துக் கொள்கைகளிலும் அமெரிக்காவைப்பின்பற்றத் துடிக்கும் இந்திய பார்ப்பன ஆட்சி, இந்தத்தனியார் துறை ஓதுக்கீட்டில் மட்டும் அமெரிக்கா காட்டும் வழியை பின்பற்ற மறுக்கிறது.

# அய்ரோப்பிய தொழில் நிறுவனங்களில் - 'சமூகநீதி'

தனியார் துறைகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கோ, பிற்படுத்தப்பட்ட வர்களுக்கோ, இடஒதுக்கீட்டை அமுல்படுத்துவது சாத்தியமானதுதான் என்பதை வலியுறுத்துவதற்காகவே, அமெரிக்காவில், அரசாங்கம் பின்பற்றிவரும் சட்டங்களையும், நடைமுறைகளையும் எடுத்துக் காட்டினோம். இதுபற்றி மேலும் சில தகவல்களை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அமெரிக்காவில் எந்த ஒரு தனியார் நிறுவனத்திலும் கருப்பர்களும் / சிறுபான்மையினரும் பங்கு பெறும் வாய்ப்புகள் மறுக்கப்படுமானால், பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்துக்கு செல்ல முடியும். இதைக் கண் காணிப்பதற்காகவே சமவேலை வாய்ப்பு ஆணையம் ஒன்றை அமெரிக்க அரசாங்கம் உருவாக்கியிருக்கிறது. 15 அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களை வேலைக்கு வைத்துள்ள எந்த ஒரு நிறுவனமும், எந்தெந்த இனத்தவர், வேலை செய்கிறார்கள் என்ற விவரங்களை இந்த நிறுவனத்துக்குத் தெரிவிக்க வேண்டும், பல்வேறு இனத்தவருக்கும் உரிய வாய்ப்புகள் மறுக்கப்பட்டிருந்தால், நீதிமன்றத்தில் வழக்கு தொடரலாம். நீதிமன்றம், அந்நிறுவனத்துக்கு கடுமையாக அபராதம் விதிக்க முடியும். இதன் காரணமாக, அந்நாட்டின் தனியார் நிறுவனங்கள், கருப்பர்களையும், சிறுபான்மையினரையும் கண்டிப்பாக வேலைக்கு அமர்த்தி விடுகின்றன. ஆனால், இங்கே நிலைமை என்ன?

சந்தோஷ் கோயல் என்பவர், இந்தியாவில் பெரும் தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் 3129 அதிகாரிகளைப் பேட்டி கண்டு, ஒரு ஆய்வை வெளியிட்டார். இதில் 2082 பேர்களின் சாதி பற்றிய விவரங்கள் தெரிய வந்தன. இவர்களில் 858 பேர் பார்ப்பனர்கள் 41.2 சதவீதம், சத்திரியர் - 18.5 சதவீதம், வைசியர்கள் - 17.9 சதவீதம், சூத்திரர்கள் - 4.2 சதவீதம்! (ஆதாரம், கெய்ல் ஓம்வெல்ட் 'இந்து' வில் எழுதிய கட்டுரை) இப்போது ஆய்வை நடத்தினால், பார்ப்பனர்களின் ஆதிக்கம் இதை விட அதிகமாக இருக்கும்! சென்னையில் ஹுண்டாய், போர்டு ஆகிய பன்னாட்டு கார் உற்பத்தி நிறுவனங்களில் நிர்வாக அதிகாரிகளாக இருப்பவர்கள் எல்லாம் பார்ப்பனர்கள்தான் ! சில ஆண்டுகளுக்கு முன், பாட்டாளி மக்கள் கட்சி, இதைச் சுட்டிக்காட்டி இந்நிறுவனங்களின் முன்பாக போராட்டமே நடத்தியது.

தனியார் துறை என்றால் - முதல் போடுவது தனி நபர்கள் தானே: என்று கருதக்கூடும்: அது உண்மையல்ல : தனியார் நிறுவனங்கள் - பொது மக்களிடமிருந்து பங்குகள் மூலம், மூலதனத்துக்காக நிதி திரட்டுகின்றன ; அரசு நிதி நிறுவனங்களிடமிருந்து பெரும் தொகையைக் கடனாக வாங்குகின்றன! இதுதவிர நில ஒதுக்கீடு, மின்சாரம், தண்ணீர் வழங்குதல் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கு, மாநில அரசுகளே வசதிகளை செய்து தருகின்றன. இதற்கான கட்டணங்களில் இந்தத் தொழில் நிறுவனங்களுக்கு தாராளமாக சலுகைகள் காட்டப்படுகின்றன! அரசாங்கத்தின் இவ்வளவு



தலைமை ஆசிரியர் எம்.ஜே. அக்பர், பத்திரிகைத் துறையில் வெளிநாட்டினர் நுழைவை எதிர்ப்பவர்களின் முகத்திரையைக்கிழித்தெறிந்தார். எம்.ஜே. அக்பர் சிறந்த பத்திரிகையாளர்; 'சண்டே' வார ஏடு துவக்கப்பட்ட போது அதன் ஆசிரியராக பொறுப்பேற்று, அந்த இதழைப் பிரபலமாக்கியவர். அவரது 'சண்டே' பத்திரிகை, பத்திரிகைத் துறையில் பல முன்னுதாரணங்களை ஏற்படுத்தியது; 'சங்பரிவார்'களின் வகுப்புவாத முகத்திரைகளைக் கிழித்துக் காட்டிய பெருமை 'சண்டே' இதழுக்கு உண்டு!

சம்பவம் நடந்த பகுதிகளுக்குச் சென்று, தகவல்களை நேரடியாகப் பெற்று வெளியிடும் முறையை இந்தியாவில் முதன் முதலில் அறிமுகப்படுத்தியது 'சண்டே' தான் என்றும், அதற்குப் பிறகுதான் கண்மூடித்தனமாக இந்து வெறி உணர்வோடு செய்திகளை வெளியிட்டு வந்த இந்தியாவின் பிரபல பத்திரிகைகள், தங்களது போக்கை ஓரளவாவது மாற்றிக் கொள்ளும் கட்டாயம் உருவானது என்றும், பி.பி.சி. செய்தியாளர் குர்பான் அலி புதுடில்லியில் நடந்த ஒரு கருத்தரங்கில் சுட்டிக்காட்டினார். அக்பர் பின்னர் சண்டே பத்திரிகையை விட்டு வெளியேறியவுடன் அந்தப் பத்திரிகையின் போக்கில் மாற்றம் ஏற்பட்டு, இப்போது அது வெளிவராமல் நின்றும் போய் விட்டது! பிரபல எழுத்தாளர் குஷ்வந்த்சிங் ஆசிரியராக இருந்து செயல்பட்ட 'இல்லஸ்டிரேட்டட் வீக்லி' வார ஏடும், மதவெறிக்கு எதிரான முற்போக்குக் கருத்துக்களை எழுதுவதில் முன்னின்றது! டி.எப். காரக்கா நடத்திய கரண்ட் ; கரஞ்சியா நடத்திய 'பிளிட்ஸ்' போன்ற வார ஏடுகளும் மதவெறிக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்தன.

ஆனால், இந்தப் பத்திரிகைகள் எல்லாம் இப்போது நின்று போய்விட்டன. ஆனாலும், சக்தி வாய்ந்த பத்திரிகை நிறுவனங்கள் பார்ப்பன நிறுவனங்களாகவே இருக்கின்றன! "பத்திரிகை உலகம் தங்கள் குடும்பத்துக்குள்ளேயே சுற்றிச் சுழல வேண்டும் என்பதால்தான், பத்திரிகைத் துறையில் வெளிநாட்டினர் நுழைவதை இவர்கள் எதிர்க்கிறார்கள் " என்று பெங்களூர் கருத்தரங்கில் எம்.ஜே. அக்பர் பகிரங்கமாகவே குற்றம் சாட்டினார். இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமலர் போன்ற பத்திரிகை நிறுவனங்களில் பிரச்சனைகள் வந்தபோது, அவர்கள் குடும்பத்தினரே பங்கு பிரித்துக் கொண்டு, தனித்தனியாகப் பத்திரிகைகளை நடத்தி வருகின்றனர்! ஆனால் செய்திகளை வெளியிடும், அதிகாரம் முழுவதும் பார்ப்பனர்களிடம்தான் இருக்கிறது !

# அக்பர், அம்பலப்படுத்திய உண்மை !

இந்தியா 'சுதந்திரம்' அடைவதற்கு முன்பே, பல ஏடுகள், இந்தியாவில் பிரிட்டிஷாரால் துவக்கி நடத்தப்பட்டன. இப்போது வெளிவந்து கொண்டிருக்கும் 'தி டைம்ஸ் ஆப் இந்தியா', 'தி ஸ்டேட்ஸ்மேன், திபயோனீர்' போன்ற ஆங்கில நாளேடுகள், பிரிட்டிஷாரால் துவக்கப்பட்டதுதான். அப்போது ஆங்கிலம் படித்த வர்க்கமாக இருந்தவர்கள் பார்ப்பனர்கள்தான். அவர்களிடையே பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆதரவை உருவாக்கும் நோக்கத்தோடு இந்தப்பத்திரிக்கைகள் நடத்தப்பட்டன. அதே காலகட்டங்களில் வெளிவந்த தி இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், கேசரி, அமிர்தபசார் போன்ற பத்திரிகைகள் பிரிட்டிஷாரால் நடத்தப்படவில்லை! பார்ப்பன - பனியாக்களால் நடத்தப்பட்டன. இந்தப் பத்திரிக்கைகள் சுதந்திரப் போராட்டத்துக்கு ஆதரவாக இருந்ததாக சொல்லப்பட்டாலும் கூட, பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட வகுப்புவாரி உரிமை மற்றும் சீர்திருத்த சட்டங்களை இவைகள் எதிர்த்து வந்தன.

பிரிட்டிஷ் ஆட்சி முடிவுக்கு வந்த பிறகும், இந்தப் பத்திரிக்கைகள் தங்களின் பார்ப்பன சார்புப் போக்கிலிருந்து மாறவில்லை! இன்று அகில இந்திய அளவில் வெளிவரும் பல தேசிய ஆங்கில நாளேடுகள் பெரும் தொழில் நிறுவனக்குழுமங்களாலே நடத்தப்படுகின்றன! சில உதாரணங்கள் :

தி இந்துஸ்தான் டைம்ஸ் - பிர்லா குழுமம், தி டைம்ஸ் ஆப் இந்தியா - சாஹீஜைன் குழுமம், தி ஸ்டேட்ஸ்மேன் - டாட்டா குழுமம், தி பயோனீர் - தாபர் குழுமம், தி வீக் - மதராஸ் ரப்பர் பேக்டரி குழுமம், 'அவுட்லுக்' வார இதழ் - ரஹேஜா குழுமம், இந்தியா டுடே - ஹிந்துஸ்தான் தாம்சன் குழுமம், தி இந்தியன் எக்ஸ்பிரஸ் - கோயங்கா குழுமம், தி இந்து - கஸ்தூரி அய்யங்கார் குழுமம்.

மேற்குறிப்பிட்டவைகளில் 'தி வீக்' இதழ் மட்டும் கிறிஸ்தவ மதப்பிரிவைச் சார்ந்த குழுமம். ஏனைய நிறுவனங்கள் அனைத்தும் பார்ப்பன - பனியாக்கள் நிறுவனங்களாகும். இவைகள் அனைத்துமே பார்ப்பன ஊதுகுழல் நிறுவனங்களாகவே செயல்படுகின்றன! அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் எல்லாம் வேகம் வேகமாக தனியார் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதையும் - வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் முதலீடு செய்வதையும், இந்தப் பத்திரிகைகள் தீவிரமாக ஆதரிக்கின்றன. அதே நேரத்தில் பத்திரிக்கைத் துறையில் அன்னிய நாட்டு நிறுவனங்கள் நுழைவதை மட்டும் கடுமையாக எதிர்த்து வருகின்றன. ஏன் ? வெளிநாட்டு நிறுவனங்கள் பத்திரிகைத் துறையில் நுழைந்து விட்டால், தங்களின் பார்ப்பன ஆதிக்கம் தகர்ந்து போய்விடும் என்ற அச்சத்தைத் தவிர இதற்கு வேறு எந்தக் காரணமும் இல்லை.

2002ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ம் தேதி இந்திய தொழில் - கூட்டமைப்பு பெங்களூரில் ஒரு கருத்தரங்கைநடத்தியது. இதில் 'தி ஏசியன் ஏஜ்' நாளிதழின்



சலுகைகளையும், வசதிகளையும் பெற்றுக்கொள்ளும் ஒரு நிறுவனம், அந்நாட்டின் அனைத்துப் பிரிவு குடிமக்களுக்கும், உரிய பிரதிநிதித்துவம் தர வேண்டாமா? அதைச் செய்யாமல், முழுமையாகப் பார்ப்பனர்களை மட்டுமே நிரப்புவது, சமூக அநீதி அல்லவா?

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரில் - அய்.நா.வின் இன ஒதுக்கலுக்கு எதிரான மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டின் கண்காட்சி அரங்கில் வோல்வோ கார் நிறுவனம் (Volvo Car Corporation) ஓர் அரங்கை அமைத்திருந்தது. தங்களது நிறுவனத்தில், பல்வேறு இனத்தவருக்கும் வாய்ப்புகள் தரப்பட்டிருப்பதால் தான், தங்களது நிறுவனத் தயாரிப்புகளான கார்களை பல்வேறு பிரிவினரும் வாங்குகிறார்கள். இதுவே தங்களது வெற்றிக்கு முக்கிய காரணம் என்று விளக்கும் வெளியீடுகளை அங்கே வினியோகித்தார்கள். இதுதவிர இன ஒதுக்கலுக்கு எதிராக, உலக அளவில் நடக்கும் இயக்கத்தில், தாங்களும் பங்கு கொண்டு, தங்களது நிறுவனங்களில் கருப்பர்கள் உட்பட பல்வேறு சிறுபான்மையினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்கியிருப்பதாக வேறு சில நிறுவனங்களும் அறிவித்திருந்தன.

1. 'சன்லாம்' ( தென்னாப்பிரிக்க நிதிநிறுவனம் ).
2. வோல்வோ கார் நிறுவனம் (இது சுவீடன் நாட்டைச் சார்ந்தது)
3. பிரேசில் நாட்டைச் சார்ந்த மீடியா கார்ப்பரேஷன் (தகவல் தொடர்பு நிறுவனம்)
4. தென்னாப்பிரிக்காவின் எரிசக்தி நிறுவனமான எஸ்கோம்

இந்த அறிவிப்பைப் பெருமையுடன் பறைசாற்றியதை நாம் நேரிலே காண முடிந்தது; இந்தியாவில் டி.வி.எஸ். நிறுவனமோ, டாட்டா நிறுவனமோ, அம்பானி நிறுவனமோ, கோயங்கா நிறுவனமோ, இப்படி அறிவிக்குமா? தங்கள் நிறுவனங்களில் பார்ப்பனர்களைத் தவிர வேறு எவரையும் சேர்ப்பதில்லை என்று தான் இவர்களால் சொல்ல முடியும்! அரசு உதவிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு, பல்வேறு இனப்பிரிவினரிடமும் வியாபாரம் நடத்தி, கொள்ளை அடிக்கும் இவர்கள், பார்ப்பனத் திமிரோடு, செயல்படுகிறார்கள். இதைத் தட்டிக் கேட்கும், சட்டங்களோ, நடைமுறைகளோ இல்லை! அமெரிக்காவில் இருப்பது போன்ற சட்டங்கள் இங்கே அமுலில் இருக்குமானால், தலித் மக்களுக்கு எவ்வளவோ வேலை வாய்ப்புகள் கிடைத்திருக்குமே !

# பத்திரிக்கைத் துறையில் பார்ப்பன ஆதிக்கம்!

தகவல் தொடர்பு சாதனங்கள் - இப்போது பார்ப்பனர்களின் ஆதிக்கத்திலேயே இருக்கின்றன. ஒரு மாநிலத்தில் பெரும்பான்மையான மக்கள் பேசுவதும், படிப்பதும் மாநில மொழியில்தான்! ஆனால் மாநில மொழிகளில் வரும் பத்திரிக்கைகள் தங்களுக்கென தனி அடையாளத்தை உருவாக்கிக் கொள்ளாமல், சிறுபான்மையினர் படிக்கக்கூடிய ஆங்கில இதழ்களை அடியொற்றியே செயல்படுகின்றன.

தமிழ்நாட்டில் 'இந்து' - பார்ப்பனர் பத்திரிக்கை, முன்னணியில் நிற்கிறது. தந்தை பெரியாரின் 'விடுதலை' நாளேட்டில், குத்தூசி குருசாமி அவர்கள் - 'இந்து' பத்திரிக்கைக்கு சூட்டிய பெயர் 'மவுண்ட்ரோடு மகாவிஷ்ணு' என்பதாகும். அது ஒரு அய்யங்கார் நிறுவனப்பத்திரிக்கை. நாட்டில் சாதி உணர்வுகள் வளர்ந்து வருவதாகவும், சாதிக்கட்சிகள் பெருகி விட்டதாகவும் முற்போக்கு சிந்தனை கொண்டது போல் இந்தப் பத்திரிக்கை எழுதுவது உண்டு; ஆனால், 'இந்து' நிறுவனத்தில் நூறு சதவீதம் பணியாற்றுவது பார்ப்பனர்கள்தான்! அதுவும் அய்யங்கார் பார்ப்பனர்களுக்குத் தான் முன்னுரிமை! தவறிப்போய்கூட ஒரு தாழ்த்தப்பட்டவர், ஆசிரியர் குழுவிலோ, செய்தியாளர் குழுவிலோ இருக்க மாட்டார்; அதுவும் 'இந்து' பார்ப்பன நிர்வாகத்தில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கே கூட இடமில்லை!

தமிழ்நாட்டில் 1947ல் முதலமைச்சராக இருந்தவர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்! பழுத்த ஆத்திகர்; ஆனால் பார்ப்பன எதிர்ப்பாளர்; அவரது ஆட்சிக் காலத்தில், தொழில்கல்வியிலும், அரசுப்பணிகளிலும், இடஒதுக்கீட்டை அமுல் படுத்தினார், இதனால் பார்ப்பனர்கள் கொதித்துப்போய் - தமிழ்நாட்டுக்கு வந்த காந்தியாரிடம் புகார் செய்தனர். 'ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தாடியில்லாத ராமசாமி நாயக்கராக செயல்படுகிறார்' என்று பெரியாரோடு ஒப்பிட்டுக் கூறினார்கள். 'பிராமணர்களுக்கு' பொறியியல் கல்லூரிகளில் சரியாக இடம் தரப்படுவதில்லை என்று பார்ப்பனர்கள் சொன்னபோது, காந்தி, பார்ப்பனர்களிடம் ஒரு கேள்வியைக் கேட்டார். 'வேதத்தை ஓதி, வேதத்தைக் கற்றுத்தருவது தானே பிராமணன் கடமை; அவர்கள் ஏன் என்ஜினியரிங் கல்லூரிக்குப் போக வேண்டும்? என்று திருப்பிக் கேட்டார். பார்ப்பனர்களால் பதில் சொல்ல முடியவில்லை!

அந்தக் காலத்தில் 'இந்து' பத்திரிக்கை ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் - சாதி உணர்வோடு செயல்படுவதாக எழுதியது; ஓமந்தூரார் தனது முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து நேரடியாக 'இந்து' ஆசிரியருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது அலுவலகத்துக்கு அழைத்தார். நேரடியாகவே கேட்டார் 'இந்து ஆசிரியரே! என்னை சாதியவாதி என்று எழுதியிருக்கிறீர்களே!



உங்களது 'இந்து' பத்திரிக்கையில் பிராமணரல்லாதார் எத்தனை பேர் வேலை செய்கிறார்கள்? சொல்லமுடியுமா' என்று கேட்டார். இந்து' ஆசிரியர் திக்கு முக்காடிப் போனார் ; தமது சாயம் வெளுத்து விட்டதே என்று தலைகுனிந்து வெளியேறினார்.

ஓமந்தூரார் காலத்தில் இருந்த நிலைதான் இப்போதும் நீடிக்கிறது! 'இந்து' உட்பட இந்தியா முழுதும் ஆங்கிலப் பத்திரிக்கைகளில் பணியாற்றுவது 90 சதவீதம் பார்ப்பனர்கள்தான் ! பார்ப்பனரல்லாதார் வெகு சிலர்தான்! தலித்துகள் முழுமையாகக் கிடையாது! பார்ப்பனரல்லாத உயர்சாதிக்காரர்கள் அல்லது பிற்படுத்தப்பட்டவர்கள் தங்களது அடையாளங்களை மறைத்துக் கொண்டு, ஒன்றரை பார்ப்பனர்களாகவே செயல்பட, வேண்டியிருக்கிறது. அப்போதுதான் இருக்கிற வேலையைத் தக்கவைத்துக் கொள்ள முடியும் என்ற நிலை! ஆனால் இந்தப் பார்ப்பனப் பத்திரிகைகளில் சந்தாதாரர்களாக - வாசிப்பாளர்களாக அதிக எண்ணிக்கையில் இருப்பவர்கள் பார்ப்பனரல்லாதார்தான்! பார்ப்பனரல்லாதார், விழிப்புணர்வு இல்லாதவர்களாக இத்தகைய பார்ப்பன சார்பு பத்திரிக்கைகளைப் புறக்கணிக்கும் உறுதி இல்லாதவர்களாக இருப்பது, பார்ப்பன ஏடுகளுக்கு வாய்ப்பாகி விட்டது.

பத்திரிக்கை விற்பனை குறைய ஆரம்பித்தால் பார்ப்பனர்கள் பதறுவார்கள்; பார்ப்பனரல்லாத பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட எழுத்தாளர்களின் கட்டுரைகள் மற்றும் இந்த சமூகங்களின் செய்தியாளர்கள் தரும் தகவல்கள் இடம் பிடித்தால்தான் பத்திரிகை விற்பனையாகும் என்ற நிலை உருவானால், பார்ப்பனர்களின் கொட்டம் அடங்கும். பத்திரிகை நிறுவனங்களில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு உரிமை சட்ட ரீதியாக இருக்குமானால் பார்ப்பன ஏடுகள் இப்படி ஒரு சார்பாக செயல்பட முடியுமா ?

## பெல் நிறுவனத்தில் மட்டும் ...

திருச்சி திருவெறும்பூரில் உள்ள பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் ( BHEL) எனும் பொதுத்துறை நிறுவனத்தில் 20,000 பேர் வேலை செய்தனர், இப்போது 8000 பேர் மட்டுமே வேலை செய்கின்றனர் ; இதனால் தாழ்த்தப்பட்டோருக்கு இடஒதுக்கீட்டின்படி கிடைத்திருக்கவேண்டிய 4000 பதவிகள் கிடைக்காமல் போய்விட்டன. இந்த 8000 தொழிலாளர்களில், 3000 பேர் வரை வீட்டுக்கு அனுப்பத் திட்டம் தீட்டி வருகிறார்கள். கணினியில் மென் பொருள்களை வடிவமைத்து ஆலையை நடத்தினால், 500 பேர் மட்டுமே போதும் என்கிறார்கள். இப்படி 500 பொறியாளர்கள் மட்டுமே போதும் என்றால் - எல்லாம் பார்ப்பனர்களாகத்தான் இருப்பார்கள். 4000 தலித் மக்களுக்கு கிடைத்திருக்க வேண்டிய வேலைவாய்ப்புகளை அரசின் ஆட்குறைப்புத் திட்டத்தால் இழந்து நிற்கிறோம்.